06.08.2024

O.S.No.180/2019

வா.சா.1.திரு.முத்துராமலிங்கம் த.பெ.சின்னையா

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. தாவா சொத்தினை நான் சசிசுப்புராம் என்பரிடம் இருந்து கிரையம் வாங்கினேன். அவர் அய்யனாரிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளார். நான் கிரையம் பெற்ற கிரைய ஆவணம் மற்றும் சசிசுப்புராம் கிரையம் பெற்ற கிரைய ஆவணம் ஆகியவற்றின் அசலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாவா சொத்தினை கிரையம் பெற்று 5 ஆண்டுகள் ஆகின்றது. நான், தாவா சொத்தினை கிரையம் வாங்கும் போது அளந்து அத்துமால் பார்த்து வாங்கினேனா என்றால் இல்லை. அதே போல் சசிசுப்புராம்,அய்யனாரிடம் இருந்து அளந்து அத்துமால் அசல் வழக்கு ர்த்து கிரையம் வாங்கினாரா என்றால் எனக்கு தெரியாது. நான் தாவாசொத்தினை கிரையம் வாங்கிய போது முறையாக ஆவங்களை பரிசீலனை செய்து வழக்கறிஞரிடம் சட்ட கருத்துரை பெற்று கிரையம் வாங்கவில்லை என்றால் சரிதான், எல்லாம் சரியாக இருக்கிறது என்று கூறியதன் அடிப்படையில் நான் கிரையம் வாங்கினேன். தாவாஅசல் வழக்கு சொத்து ஆதியில் இஎம்ஜி சௌந்திராஜனுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்அசல் வழக்கு , அவருக்கு நிறைய சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கட்டுப்பட்ட சர்வே எண்கள் எனக்கு தெரியாது.

2. இஎம்ஜி சௌந்திராஜன் எனப்வருக்கு தாவா சர்வே எண்களில் 169/1 169/2ல் கட்டுப்பட்ட சொத்துக்களை கிரையம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும், அய்யனார் மோசடியாக இஎம்ஜிசௌந்திராஜன் என்பவரது கையெழுத்தினை இட்டு அவர் கிரையம் பெற்றதாக கியைம் ஆவணத்தினை பதிந்து கொண்டதின் அடிப்படையில் மோசடியாக சசிசுப்புராம் அவர்களுக்கு கிரையம் கொடுத்து அதன் அடிப்படையில் நான் கிரையம் பெற்றுள்ளதால் எனது கிரைய ஆவணப்படி தாவாசொத்தில் எந்த உரிமையும் எனக்கு சித்திக்கவில்லை என்றால் சரியல்ல. அய்யனார் என்பவர் இஎம்ஜி சௌந்திராஜன் எனப்வரிடம் இருந்து கிரையத் பெற்றதாக சொல்லப்படும் 20.04.1996ம் தேதிய கிரைய ஆவணம் கேரளா மாநிலம் பாறாசலையில் பதிவு பெற்ற ஆவணமாக உள்ளது என்றால்

சரிதான். அந்த ஆவணம் பதிவு செய்யப்பட்ட காலகட்டங்களில் மதுரையில் சார்பதிவாளர் அலுவலகம் இருந்த போதுஅசல் வழக்கு அந்த சொத்தினை மோசடியாக அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அய்யனார், கேரளாவில் உள்ள பாறசாலையில் மோசடியாக பதிவுசெய்துள்ளார் என்றால் சரியல்ல.

3. 20.04.1996 தேதியிட்ட கிரைய ஆவணமும், 11.09.1997 தேதியிட்ட பொது அதிகார ஆவணமும் அய்யனாருக்கு இளம்ஜி சௌந்திராஜன் என்பவர் எழுதிகொடுக்க வேண்டிய அவசியமே இல்லை என்றால் சரயில்ல. மேற்கூறிய இரண்டு ஆவணங்களின் அசல் ஆவணங்களை நான் வாங்கி பார்க்கவில்லை. அசல் வழக்கு தாவா சொத்தின் நான் கம்பிவேலி அமைக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து மற்றும் இந்த வழககோடு இணைந்து தாக்கல்செய்துள்ள மற்ற வழககு சொத்துக்கள் ஒன்றோடொன்று இணைந்து ஒரே சமுக்கமாக காணப்படுகிறது என்றால் சரிதான், அதை சுற்றிலும் முள்கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்குள் பிரதிவாதிகள் அனுமதிஇல்லாமல் பிரவேசிக்க முடியாது என்றால் முன்பு நாங்கள் சென்று கொண்டிருந்தோம்.தற்போது முள்கம்பி வேலி வைத்துஅடைத்து விட்டார்கள், உள்ளே செல்லமுடியாது. எப்போதுமே தாவாசொத்திற்குள் பிரதிவாதிகள் அனுமதி இல்லாமல் செல்ல முடியாது என்றாலும், இந்த வழககிற்காக தற்போது தான் அவ்வாறு செல்லமுடியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்களில் அடங்கியுள்ள சொத்துக்கள் கோபாலகிருஷணகோன் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்து என தெரிய வருவதாக எனது நிருபண வாக்குமூலத்தில் நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

4. Trust O.P.35/67 என்ற உத்தரவி னஅடிப்படையில் நீதிமன்ற அனுமதி பெற்று தாவா சொத்தினை இளம் கோபாலகிருஷ்ண பள்ளியின் சார்பாக பள்ளி கல்வி துறைக்கு கொடுக்கப்பட்டதாக நான் நிருபண வாக்குமூலம் சொல்லி உள்ளேன் என்றால் சரதிான். அந்த ஆவணத்தினை நான் நேரடியாக பார்த்தில்லை என்றால் சரிதான். அவ்வாறு அனுமதி எதுவும் வழங்கப்படவில்லை என்றாலும் இந்த வழக்கிற்காகபொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அய்யனார் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் கிரைய ஆவணம் மற்றும் அவர் பெற்றதாகசொல்லப்படும் பொது அதிகார ஆவணம் மோசடியானவை எனவும் இளம்ஜி

சௌந்திராஜன் கையொப்பதினை மோசடியாக இட்டு உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் எனவும்பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை செய்துள்ள நிலையில் அதன் உண்மை தன்மையை நிருபிக்கும் வகையில் நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

5. தாவா சொத்து ஆரம்பத்தில் இருந்து தற்போது வரை பிரதிவாதிகள் பள்ளிக்கு பாத்தியப்பட்ட விளையாட்டு மைதானமாக இருந்து வருகிறது என்றால் சரியல்ல. எனது பெயரிலோ, எனது முன் பாத்தியஸ்தரான சசிசுப்புராம் மற்றும் அய்யனார் பெயரிலோ தாவா சொத்து குறித்து வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் பெயர் மாற்றம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எனது கிரைய பத்திரம் மற்றும் சசிசுப்புராம் கிரைய பத்திரம் ஆகியவை பெயரளவில் ஏற்படுத்தப்பட்டது என்றாலும் தற்போது வரை நடைமுறைக்கு வரவில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு உரிமை இல்லாத காரணத்தினால்தான் வருவாய் துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ-5 மற்றும் வா.சா.ஆ-21 ஆவணம் எனது கிரைய ஆவணத்துடன் இணைந்து தாக்கல் செய்யப்பட்ட ஆவணமாக இல்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கும் வா.சா.ஆ-5 மற்றும்வா.சா.ஆ-21 ஆவணத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றாலும், அவை இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றாலும் சரியல்ல.

6. தாவா சொத்து கோபாலகிருஷ்ண கோன் அறக்கட்டளைக்கு பாத்தியப்பட்ட சொத்தாக இருப்பதால் மேற்படி அறக்கட்டளையை இந்த வழக்கில் சேர்க்காததாலும், அதேபோல் பள்ளி கல்விதுறையை தரப்பினராக சேர்க்காததாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. கோபாலகிருஷ்ண கோன் டிரஸ்டில் வங்கி மூலமாக ரூபாய்.50000 வைப்பீடு செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதிகள் தொடர்பான அசல் வழகது எண்.75/11, 676/2009, 594/2009, 675/09, 671/09 வழக்குகள் தாக்கல் செய்திருந்ததாக நான் பிராதில் சொல்லி உள்ளதால் அந்த விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி வழககுகளில் தாவாசொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்கள்.169/1 மற்றும் 169/2 ஆகியவை குறிப்பிடபடவில்லை என்பதற்காக தாவா சொத்தில் நான் உரிமை கொண்டாட இயலாது என்றால் சரியல்ல.

7. தாவா சொத்து சம்பந்தமாக எனக்கு உரிமையே இல்லை என பிரதிவாதிகள் தரப்பில் எதிரவாதம் செய்து வரும் நிலையில் தாவா சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ள காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடிசெய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. அய்யனார், சசிசுப்புராம் எங்குள்ளார் என்றால் எனக்கு தெரியாது. சசிசுப்புராம் என்பவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளதால உரிய தரப்பினரை சேர்க்காத காரணத்தினால் இந்த வழகக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்து டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் கோபாலகிருஷ்ண கோன் டிரஸ்ரையும் பள்ளிகல்வி துறையினைரையும் தரப்பினராக சேர்க்காமல் இந்த வழக்கு தாக்கல் செய்துளளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

8. தாவாசொத்தின் மதிப்பு செண்டு 1-க்கு சுமார் 3 லட்சம் முதல் 5 லட்சம் இருக்குமா என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் மதிப்பு சுமார் செண்டு 1-க்கு சுமார் 5 லட்சம் வரை உள்ளது என்ற விவரத்தினை நான் தெரிந்துகொண்டே தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தினை நான் முறையாக மதிப்பிடு செய்து நான் நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்பதற்காக இந்த வழகக்கு தள்ளுபடிசெய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் அனுபவத்தில் நாங்கள் ஒருபோதும் இருந்ததில்லை என்றாலும், எனது கிரைய பத்திரம் ஆவணமாகதான் உள்ளதே தவிர நடைமுறைக்கு வரவில்லை என்றாலும் தற்போது வரை தாவா சொத்து பிரதிவாதிகள் அனுபவத்தில் இருந்து வருகீறது என்றாலும், தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. தாவா வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் நகல் என்பதால் அதை சாட்சியமாக அனுமதிக்க முடியாது ஆவணங்கள் என்பதால் அதன் அடிப்படையில் எனது வழக்கிற்கு எந்த அனுகூலமும் ஏற்படாது என்றாலும், அந்த ஆணவத்தினை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்றாலும் சரியல்ல.